மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அறிவிப்புகள்.

(அ) மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி.

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1982.

கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன் வடிவு, 1982.

சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் திருத்தம் எதுவுமின்றி நிறைவேற்றப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/1982).

2. 1982 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 19/1982).

3. 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 20/1982).

(ஆ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : பேரவைக்குச் சில அறிவிப்புகள்.-